# அன்னையின் வாழ்த்து

## "குழல் இனிது, யாழ் இனிது என்பார் மழலைச் சொல் கேளாதார்"



அன்புக் குழந்தைகளே! மாலை நேர மின் மினிப் பூச்சிகளே! சிறுவர் அரங்கம் - 5 வது மலர் உங்கள் கரங்களில் மலரும் இவ்வேளையில் உங்கள் அனைவரையும் சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன்

"குழந்தைகளைப் போல் மாறாவிடில் விண்ணரசில் நுழைவது கடினம்" என இறைமகன் இயேசு சிறுவர்களாகிய உங்களை உலகிற்கு முன் மாதிரியாக நிறுத்துகிறார். எனெனில் உங்களுக்குள் தான் மாற்றத்தைக் கொண்டு வரும் இறைசக்தி நிரம்பியுள்ளது. நீங்கள் பங்கு கொள்ளும் மாலை நேரப் பள்ளி மற்றும் குழந்தைகள் பாராளுமன்ற செயல்பாடுகள், தலைமைப் பண்புகளை அடித்தளமிடும் பொறுப்புகள், பணிகள், உரிமைகளை அறிந்துக் கொண்டு, அதனை நிலை நாட்ட குரல் கொடுத்தல், அரசு அதிகாரிகளை சந்தித்து சமுதாயத்தில் அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்தல் போன்றவைகள் இதற்கு சிறந்த சான்றுகளாக விளங்குகின்றன.

உண்மைக் கல்வி என்பது மாணவனின் உடல், உள்ளம், ஆன்மா ஆகியவற்றின் திறன்களை வெளிக் கொணர்வது - மகாத்மா காந்தியடிகள்.

இத்தகைய திறமைகளை வெளிக் கொணரும் இதழாக சிறுவர் அரங்கம் திகழ்வதில் பெருமை அடைகின்றேன். உங்களது படைப்புத்திறன், பங்குகொள்ளும் கலைநிகழ்ச்சிகள், முன்னேற்றத்திற்கான செயல்பாடுகள். திறமைகள், ஆர்வங்கள், இளமைத் துடிப்புடன் வீறு கொண்டு செல்லும் தலைமைப் பொறுப்புகளைக்கண்டு வியக்கின்றேன். இதற்கு பக்கப்பலமாக செயல்படும் Auxilium ARUWYE - யின் இயக்குனர் அருட்சகோதரி. காணிக்கை ராஜ் ஷர்மிளா அவர்களின் விடாமுயற்சியினை மனதாரப் பாராட்டுகிறேன்.

அவருடன் இணைந்து செயல்படும் ஒருகிணைப்பாளர்கள் மற்றும் ஆசிரியர்கள் அனைவரின் திட்டங்களும், செயல்பாடுகளும் வெற்றி பெற வாழ்த்துகிறேன், ஜெபிக்கிறேன். சிறுவர் அரங்கம் இதழ் நாளும் மலர்ந்து, மணம்பரப்ப, பல்லாயிரம் இதழாக விரிய இறையாசீர் என்றும் உங்களுடன்.

Sr. Nirmala Lazar.

அருட்சகோதரி. நிர்மலா லாசர்
சென்னை மாநிலத் தலைவி

# அருட்சகோதரியின் அறிமுகம்



ஒரு விதையானது தன்னகத்தே பல்லாயிரம் மரங்களை கொண்டுள்ளது. அது விதைக்கப்பட நல்ல நிலங்களை எதிர்ப் பார்த்துக் கொண்டிருக்கிறது. ஆம் அன்புக் குழந்தைகளே நீங்களே அந்த விதைகள்.

சிறகடித்து பறக்கும் சிட்டுக்குருவிகளாய் வீட்டில் வலம் வருவதை விட வானுயரப் பறக்கும் கழுகுகளாய் வலிமை பெற்றுக்கொண்டிருக்கும் உங்களை சிறுவர் அரங்கம் - 5 வது மலர் வழியாக சந்திப்பதில் அளவில்லா மகிழ்ச்சியடைகின்றேன்.

சிறுவர் பாராளு மன்றத்தின் மூலமாக பல்வேறு அமைச்சர் பொறுப்புகளை ஏற்று, உங்களது கடமைகளை செய்து, உரிமைகளை நிலை நாட்டி, ஒழுக்கத்தில் சிறந்து விளங்கி, கல்வியில் வேரூன்றி, தான் வாழும் இடங்களில் புதுமைகளையும், புரட்சிகளையும் ஏற்படுத்தி, நாளைய தலைவர்களாக உருவாகிக் கொண்டிருக்கிறார்கள். நம் குழந்தைகள் என்பதை வெளிபடுதுவதே சிறுவர் அரங்கத்தின் நோக்கம்.

படைப்புத்திறன்களை வெளிக்கொணரும் கவிதைகள், கட்டுரைகள், ஓவியங்கள் மற்றும் சிந்தனைத் திறனை சீர்ப்படுத்தும் கலைகள், பண்பாட்டையும், ஒழுக்கத்தையும் மெருகூட்டும் செயல்பாடுகள், சமுதாய நலப்பணிகள் என வளரும் பருவத்திலேயே தங்களை அர்ப்பணித்துக் கொண்டதுமல்லாமல் பிறருக்கும் அர்ப்பணிப்பு உணர்வினை ஏற்படுத்தி வருகிறது சிறுவர் அரங்கம்.

இப்பணி சிறந்து விளங்க எங்களுக்கு எல்லா நிலைகளிலும் துணை நின்று, ஊக்குவித்து, வழிக்காட்டி வரும் நம் பாசமிகு அன்னை சென்னை மாநிலத் தலைவி அருட்சகோதரி. நிர்மலா லாசர் அவர்களுக்கு என் மனமார்ந்த நன்றிகள். குழந்தைகளின் திறன்களை வெளிக்கொணர புது உத்திகளை புகுத்தி, மதிப்பீடுகளையும், இறை - மனித உறவில் வளர பல்வேறு திட்டங்களையும், முன்னேற்ற செயல்பாடுகளையும் மேற்கொண்ட எனக்குத்தோள் கொடுக்கும் எங்கள் குழு உறுப்பினர்கள், பொறுப்பாளர்கள், அருட்சகோதரிகள், ஆசிரியர்கள், மாணவச் செல்வங்கள் அனைவருக்கும் நெஞ்சம் நிறைந்த நன்றிகள் பல. மேலும் சிறுவர் அரங்கம் மலரானது புதுப் பொலிவுடன் வெளிவர மேற்க்கொள்ளும் பெரும் முயற்சிக்கு எனது பாராட்டுகள்.

நன்றி

Sr. Shermila

அருட்சகோதிரி. காணிக்கை ராஜ் ஷெர்மிலா
இயக்குனர், ARUWYE

# குழந்தைகளுக்கு எதிராக வன்கொடுமை

எத்தனை வசதிகள், வளங்கள் இருந்தாலும் பெண்களுக்கும், குழந்தைகளுக்கும் பாதுகாப்பு இல்லாத தேசம், வாழ தகுதியற்ற நாடாகத்தான் கருதப்படும். வாய்ப்புகள்-வசதிகள் பெருகி சமுதாயத்தில் வாழ்க்கை தரம் முன்னேற முன்னேற குற்றங்களும் அதிகரிக்கின்றன.

எந்த வசதிகளும் இல்லாத காலத்தில் கட்டுப்பாடுடன் இருந்த மனிதன், நாகரிக வாழ்க்கையின் சுவையை அறிந்த பின்னர் தான் குற்றங்களை செய்ய ஆரம்பித்தான். நம் வீட்டில் இருக்கும் தாத்தா-பாட்டிகளிடம் கேட்டால் தெரியும்.. "நாடே ரொம்ப கெட்டுப்போய்விட்டது" என்று அங்கலாய்ப்பார்கள். "எங்கள் காலத்தில் எல்லாம் இப்படி வெட்டு, குத்து, கொலைகள், பாலியல் வன்முறைகள் நடந்தது கிடையாது. ஏதோ அங்கொன்றும், இங்கொன்றுமாக நடக்கும். இப்போது யாருக்கும் பாதுகாப்பு இல்லாமல் போய்விட்டது" என்று ஆதங்கப்படுவார்கள். அவர்கள் வெளிப்படுத்தும் இந்த வருத்தம் நாட்டு நடப்பை படம்பிடித்து காட்டுவதாக அமைந்து இருக்கிறது. இந்தியாவில் ஆண்டுக்கு ஆண்டு குற்றங்கள் அதிகரித்து வருகின்றன. குறிப்பாக பெண்கள்-குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள் கவலை அளிக்கக்கூடிய வகையில் உயர்ந்து இருக்கிறது. நம் நாட்டில் 15 நிமிடத்துக்கு ஒரு சிறுமி கற்பழிக்கப்படுவதாக புள்ளிவிவரம் தெரிவிக்கிறது. கடந்த 10 ஆண்டுகளில் மட்டும் குழந்தைகள், சிறுமிகளுக்கு எதிரான பாலியல் வன்முறை குற்றங்கள் 500 சதவீதம் அதிகரித்து இருக்கிறது.

பாலியல் பலாத்கார குற்றங்கள் பெருகியதற்கு மக்கள் தொகை பெருக்கம் ஒரு காரணமாக சொல்லப்படுகிறது. அதுவும் ஒரு காரணம்தான் என்ற போதிலும், மக்கள் தொகை அதிகரிப்பதால் ஏற்படும் குற்றங்களை கல்வி அறிவை மேம்படுத்துவதன் மூலமும், கடுமையான சட்டங்கள்-தண்டனைகள் மூலமும் குறைக்க முடியும்.

ஏனெனில், நம் நாட்டை விட பரப்பளவிலும், மக்கள் தொகையிலும் பெரிய நாடு சீனா. இந்தியாவுடன் ஒப்பிடும் போது அங்கு குற்றங்கள், வன்முறைகள், ஊழல்கள் எல்லாமே குறைவாகவே உள்ளன.



அதற்கு காரணம் கடுமையான சட்டங்கள். அங்கெல்லாம் குற்றம் செய்து விட்டு பணத்தாலோ, அதிகார பலத்தாலோ அல்லது சட்டங்களில் உள்ள ஓட்டைகளின் வழியாக புகுந்தோ யாரும் தப்பிக்க முடியாது. எவ்வளவு பெரிய ஆளாக இருந்தாலும், எவ்வளவு உயர்ந்த பதவியில் இருந்தாலும் தண்டனை நிச்சயம். அப்படி இருப்பதால் அங்கு சாமானிய மக்களில் இருந்து அதிகாரிகள், ஆட்சியாளர்கள் வரை தவறு செய்ய அஞ்சுகிறார்கள்.

**திரு இருதய இல்லம்,**
**காட்பாடி, வேலூர்.**

# பாலினச் சமத்துவத்தில் குழந்தைகளின் பங்கு

பாலின சமத்துவம் என்பது பன்முகத்தன்மை கொண்ட பிரச்சினைகளில் உள்ளார்ந்திருக்கிறது என்பதை இந்த ஆய்வறிக்கை கருத்தில் கொண்டுள்ளது. அதன்படி, பாலினத்தின் மூன்று குறிப்பிட்ட பரிமாணங்களின் அடிப்படையில் மதிப்பீடுகள் செய்யப்பட்டுள்ளன. அதாவது, முகமை (மறு உற்பத்தியில் பெண்களின் முடிவெடுக்கும் திறன், தங்களுக்கான செலவினங்கள், தங்கள் வீட்டு தேவைகளுக்கான மற்றும் தங்களின் பயணம் மற்றும் ஆரோக்கியத்துக்கான செலவினங்கள் தொடர்பானவை), மனப்பான்மை (பெண்கள் மற்றும் மனைவிகளுக்கு எதிரான வன்முறைகள் குறித்த மனப்பான்மை, விரும்பக்கூடிய மகன்களின் எண்ணிக்கையுடன் ஒப்பீட்டில் விரும்பக் கூடிய மகள்களின் எண்ணிக்கை தொடர்பானவை) மற்றும் விளைவுகள் (மகனை முதன்மையாக விரும்புதல் நிலைமை கடைசிக் குழந்தையின் பாலின விகிதத்துடன் கணக்கிடுதல், பெண் வேலைவாய்ப்பு, கருத்தடை தேர்வு வாய்ப்பு, கல்வி நிலை, திருமண வயது, முதலாவது பிரசவத்தின் போது வயது மற்றும் பெண்கள் அனுபவிக்கும் உடல் ரீதியான அல்லது பாலியல் ரீதியிலான வன்முறை தொடர்பானவை) ஆகியவற்றின் அடிப்படையில் மதிப்பீடு செய்யப்படுகிறது. சமூகத்தில் பெண்களின் அந்தஸ்து, பங்கு மற்றும் அதிகாரம் பெற்ற நிலையை பிரதிபலிக்கும் அம்சத்தை நோக்கமாகக் கொண்டிருக்கின்றன.

ஆய்வறிக்கையின் மதிப்பீட்டில் கண்டறியப்பட்டுள்ள முக்கிய விசயங்களில் பின்வரும் அம்சங்கள் இடம் பெற்றுள்ளன: கடந்த 10-15 ஆண்டுகளில் மகளிர் முகமை, மனப்பான்மை மற்றும் விளைவுகள் என்பனவற்றில் 17-ல் 14 குறியீடுகளில் இந்தியா முன்னேற்றம் கண்டிருக்கிறது. அவற்றில் ஏழு அம்சங்களில், வளர்ச்சி நிலைகளை கணக்கில் கொண்டால், மற்ற நாடுகளின் குழுக்களுடன் ஒப்பிடும் வகையில் இந்தியாவின் வளர்ச்சி இருக்கிறது.

பாலின செயல்பாட்டு விளைவுகள் சொத்துகளின் நிலையில் மேம்பட்டிருப்பது, ஒருமித்த மனப்போக்கு ஆகியவற்றை காட்டுவதாக உள்ளன என்ற ஊக்கம் தரும் தகவலை ஆய்வறிக்கை தெரிவிக்கிறது. மற்ற நாடுகளில் இருப்பதைவிட இந்தியாவில் இதில் பெரிய முன்னேற்றம் உள்ளது. பின்தங்கியுள்ள அம்சங்களில், காலப்போக்கில் அதை எட்டிவிட முடியும் என எதிர்பார்க்கப் படுகிறது. இருந்தாலும், மற்ற பல குறியீடுகளைப் பொருத்தவரையில், கவனிக்கத்தக்க வகையில் வேலைவாய்ப்பு, மாற்றிக் கொள்ளக் கூடிய கருத்தடை சாதன பயன்பாடு மற்றும் மகனை விரும்பும் நிலைமை போன்றவற்றில், இந்தியா இன்னும் மாற்றம் காண வேண்டியுள்ளது என்றும் அது எச்சரிக்கிறது. வளர்ச்சி மட்டுமே இவற்றைத் தீர்க்கும் வகையில் அமையவில்லை என்று குறிப்பிடுகிறது.

இந்தியாவுக்குள், வட-கிழக்கு மாநிலங்களில் (நாட்டின் பிற பகுதிகளுக்கு முன்மாதிரியானது) கணிசமான கலப்பு மரபின நிலைமை, தொடர்ந்து பிறரை மிஞ்சும் வகையில் உள்ளது என்று பொருளாதார ஆய்வறிக்கை 2017-18 தெரிவிக்கிறது. அவர்கள் வசதிபடைத்தவர்கள் என்பதால் இப்படி இல்லை என்றும் குறிப்பிடுகிறது. கடலோர மாநிலங்கள் இதில் பின்தங்கியுள்ளன. ஆனால் வளர்ச்சி நிலைகளைப் பார்த்தால், ஆச்சர்யப்படத்தக்க வகையில் சில தென் மாநிலங்கள் இதில் குறைவான நிலையிலேயே உள்ளன.

பாலின சவால் என்பது நீண்டகாலமாக உள்ளது, அநேகமாக பல்லாயிரம் ஆண்டுகள் இருப்பது, எனவே இதற்குத் தீர்வு காண்பதற்கு இதில் தொடர்புடைய அனைவருக்கும் கூட்டுப் பொறுப்பு உள்ளது என்று பொருளாதார ஆய்வறிக்கை 2017-18 கூறுகிறது.



எனவே, வளர்ச்சிக்கு இடையூறாக உள்ள சமுதாயப் பழக்க வழக்கங்களின் விரும்பத்தக்க நிலையை, மகனை விரும்பும் நிலையை இந்தியா எதிர்கொள்ள வேண்டும் என்று ஆய்வறிக்கை பரிந்துரை செய்கிறது. குறைபாடுள்ள பாலின விகிதம் ஆண்களுக்கு சாதமாக உள்ளது. இது "காணாமல் போகும்" பெண்களை அடையாளம் காண செய்துள்ளது. ஆனால் குழந்தை பெற்றுக் கொள்வதை நிறுத்திக் கொள்ளும் விருப்பம் கடைசிக் குழந்தையின் பாலினத்துடன் தொடர்புள்ளதாக இருக்கிறது. இது "விரும்பத்தகாத" சிறுமிகள் உருவாகக் காரணமாக இருக்கிறது. சுமார் 2.1 கோடி பெண் குழந்தைகள் இந்த நிலையில் உள்ளனர் என ஆய்வறிக்கை குறிப்பிடுகிறது. வெறுக்கப்படும் இந்தப் பிரிவு ஏற்படாமல் தடுக்க வேண்டியது சமூகத்தின் குறிக்கோளாக இருக்க வேண்டும் என்று அதில் கருத்து தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசின் பெண்குழந்தையை பாதுகாப்போம் பெண்குழந்தைக்கு கற்பிப்போம், செல்வ மகள் சேமிப்புத் திட்டம் மற்றும் பேறுகால கட்டாய விடுப்பு ஆகியவை சரியான திசையிலான நடவடிக்கைகள் என அறிக்கை பாராட்டு தெரிவித்துள்ளது. இந்தியாவில் தொழில் செய்யும் நிலையை எளிதாக்குவதற்கு மேற்கொண்டுள்ள முயற்சிகளைப் போல, பாலின விசயத்திலும் அதேபோன்ற உறுதியான செயல்பாடு இருப்பதாகவும் அறிக்கை கூறுகிறது.

**ஈரோடு மரியாலையா,**
**கஸ்பாபேட்டை, ஈரோடு.**

# குழந்தையின் கற்றல்

ஒரு குழந்தை கல்வி கற்பதை, பெற்றோர்கள் அடிக்கடி, பள்ளியுடன் தொடர்புபடுத்துகின்றனர். ஏனெனில், பள்ளி செல்லும் வயதை அடைந்தவுடனேயே, குழந்தைகள், கல்வியறிவை பெற தயாராகி விடுகிறார்கள் என்று பெற்றோர்கள் கருதுவதே இதற்கு காரணம். ஆனால், பலரும் உணரத் தவறுவது என்னவெனில், ஒரு குழந்தையின் கற்றல் செயல்பாடானது, அது கருவறையில் இருக்கும்போதே தொடங்கி விடுகிறது என்பதைத்தான். கல்வியறிவு என்பதைப் பற்றி நிபுணர்கள் கூறுவதை நாம் இங்கு பார்க்கலாம். ஒருவரின் கல்வியறிவு என்பது பற்றி சுருக்கமாக கூறுவதென்றால், அவர், படித்தல், எழுதுதல் மற்றும் குறியீட்டு அமைப்புகளை பயன்படுத்த தெரிந்திருத்தல் போன்றவையே ஆகும். அதேநேரத்தில், இதையே சற்று விரிவாக கூறுவதென்றால், தகவல்தொடர்பு - பேசுதல் மற்றும் கவனித்தல் ஆகிய செயல்பாடுகளின் அனைத்து அம்சங்களையும் கொண்டது. மேலும் இவற்றில், தொழில்நுட்பம், கணிதஅறிவு மற்றும் கலாச்சார அறிவு போன்றவையும் அடங்கும்.

அதே சமயம், கல்வியறிவு என்பதற்கு அகராதி தரும் அர்த்தம் இன்னும் சற்று வித்தியாசமானது. எழுதுதலும், படித்தலும், பயன்பாட்டுக் கல்வியறிவைக் குறித்தாலும், கல்வியறிவு என்பது, அர்த்தம் உருவாக்குதல், நாம் வாழும் உலகைப் பற்றிய அறிவை வளர்த்துக் கொள்ளுதல், நாம் என்ன பார்க்கிறோம், படிக்கிறோம் மற்றும் எழுதுகிறோம் என்பதை பிரதிபலித்தல் மற்றும் ஒருவரின் சொந்த இயல்பார்ந்த அறிவுத்திறன் குறித்த சிந்தனையில் ஈடுபடுதல் போன்ற விளக்கங்கள் தரப்படுகின்றன. நாம் இங்கே, கைக்குழந்தைகள் மற்றும் இளங்குழந்தைகளில், மொழி மற்றும் கல்வியறிவு மேம்பாடு எவ்வாறு நிகழ்கிறது மற்றும் அதுதொடர்பாக, பெற்றோர்களுக்கான ஆலோசனைகள் குறித்தும் விவாதிக்கவுள்ளோம். சுருக்கமாக சொல்வதென்றால், மொழி மற்றும் கல்வியறிவு மேம்பாடு என்பது ஒன்றுக்கொன்று தொடர்புடையது.

புகழ்பெற்ற ரஷ்ய உளவியல் நிபுணர் வகாட்ஸ்கி என்ன கூறுகிறார் என்றால், “குழந்தைகள் தங்களது கைகளை வெறுமனே இப்படியும், அப்படியும் அசைப்பதானது, ஒரு முக்கியமான செயல்பாடாகும். சத்தங்களை சரமாக கோர்த்து, வார்த்தைகளை உருவாக்கும் பயிற்சியாகும் இது. இந்த செய்கையானது, பிற்காலத்தில், எழுதுதல் மற்றும் புத்தகங்களைப் பிடித்தல் போன்ற கட்டுப்பாடான செயல்பாடுகளுக்கு இட்டு செல்கிறது. மேலும், பேச்சு வடிவங்களில் ஒரு குழந்தை பெறும் நிபுணத்துவமே, அதனுடைய சிந்தனையின் அடிப்படை வடிவங்களாக ஆகின்றன. இதன்மூலம், ஒரு குழந்தையின் பேச்சை, அதன் உள்ளார்ந்த திறன் வளர்ச்சியுடன் சம்பந்தப்படுத்தலாம்” என்கிறார். குழந்தையின் மொழித்திறன் வளர்ச்சி என்பது, அதன் பிறப்பிற்கு முன்பே, அதாவது, கருவிலிருந்தே தொடங்குகிறது என்று விஞ்ஞானிகள் கூறுகிறார்கள். தாயின் கருப்பையில் இருக்கும் ஒரு கருவின் கேட்கும் திறன், 25 வாரங்கள் ஆகும்போது, மேம்படுகிறது. இதன்மூலம், ஒரு குழந்தை, உலகத்திற்குள் வரும் முன்பாகவே, அதைப்பற்றிய விசயங்களை உள்வாங்குகிறது.

இந்த உலகில் பிரவேசித்த புதிதில், தனது தேவைகளை கேட்க, அழுகை போன்ற முறைகளில் ஒலியெழுப்புகிறது. இதை பெற்றோர்கள், ஒரு யூகமாக புரிந்துகொண்டு வினையாற்றுகிறார்கள். கைக்குழந்தைகளும், சிறு குழந்தைகளும், தங்களது பெற்றோர் பேச்சும் பேச்சுக்களை கூர்மையாக கவனிக்கிறார்கள் மற்றும் மொழியில் பயன்படுத்தப்படும் ஒலிப்புகளையும், ஒலிகளுக்கு இடையிலான வேறுபாடுகளையும் பற்றி புரிந்துணர்வுகளை

அவர்கள் மேம்படுத்திக் கொள்கிறார்கள். பழக்கமான ஒலிகளையே, ஒரு குழந்தை திரும்ப திரும்ப கேட்கையில், அதற்கு பெரிய முக்கியத்துவம் கொடுக்காமல், அலட்சியம் செய்கிறது. ஆனால், ஒரு புதிய வகையான ஒலியை எழுப்பும்போது, ஆர்வத்துடன் கவனிக்கிறது மற்றும் அந்த ஒலி வரும் திசையை நோக்கி திரும்பிப் பார்க்கிறது. இதைத்தவிர, சமூக முக்கியத்துவம் பெறும் வகையில், தகவல்தொடர்பு செயல்பாட்டில், முக்கியத்துவம் பெறும் ஒலிகளையும் பிரித்து அறிந்துகொள்கிறது ஒரு குழந்தை.

பிரிண்ட் செய்யப்பட்ட குறிப்புகளை, குழந்தைகள் கிரகித்து, தங்களுக்குள் பதிவுசெய்து கொள்கிறார்கள். ஒரு உள்ளடக்கம் அல்லது பார்முலாவைப் பற்றி பெரியவர்கள், ஒரு குழந்தையிடம் பேசுகையில், அவற்றுக்கு அர்த்தம் கண்டுபிடிப்பதில் குழந்தைகள் ஈடுபடுகிறார்கள். சில நேரங்களில், குழந்தைகள், பேப்பருடன் விளையாடிக் கொண்டிருப்பார்கள். அப்போது, அந்த பேப்பரை, கிழித்தோ, அதில் கிறுக்கியோ, அதை நீரில் நனைத்தோ விளையாடுவார்கள். இத்தகைய செயல்பாடுகளின் மூலம், ஒரு பேப்பரின் தன்மைகள் குறித்து அவர்கள் அறிந்து கொள்கிறார்கள். மேலும், ஒரு செய்தித்தாளையோ அல்லது பத்திரிகையையோ குழந்தைகளுக்கு படித்துக் காட்டுகையில், குழந்தைகள், அந்த பத்திரிகையை அல்லது செய்தித்தாளை எவ்வாறு பிடித்து, எவ்வாறு வசதியாக அமர்ந்துகொள்வது போன்ற உடல் மொழிகளை கற்றுக்கொள்கிறார்கள்.

மேலும், இடமிருந்து வலமாக படிக்க வேண்டுமா அல்லது வலமிருந்து இடமாக படிக்க வேண்டுமா என்பதை கற்றுக்கொள்வதோடு, பக்கங்களை ஒவ்வொன்றாக திருப்பும் வித்தையையும் கற்றுக் கொள்கிறார்கள். ஒரு வகையில் சொல்வதென்றால், இந்த உலகில், தான் செயல்படுவதற்கான அனைத்துவகை தகவல்கள் மற்றும் திறன்களை ஒரு குழந்தைப் பெற்றுக்கொள்கிறது.

## குழந்தையிடம் பேசுதல்

ஒரு பெண் கருவுற்று இருக்கும்போதே, அவர் வயிற்றில் இருக்கும் குழந்தையிடம் பேசுதல், படித்தல் மற்றும் பாடுதல் போன்ற நடவடிக்கைகள் அவசியம். இதன்மூலம், சம்பந்தப்பட்டவர்களின் குரல்களை, ஒரு குழந்தை, கருவில் இருக்கும்போதே அடையாளம் காணும் என்று விஞ்ஞானிகள் கூறுகிறார்கள். நம் கலாச்சாரத்தில், நிறைமாத கர்ப்பிணிகளுக்கு நடத்தப்படும் வளைகாப்பு நிகழ்ச்சியானது, குழந்தையின் கேட்கும் திறனை மேம்படுத்தும் செயல்பாட்டிற்கான ஒரு சிறந்த உதாரணம்.

## தொடுதல் அனுபவம்

தொடுதல் மற்றும் உணர்தல் அனுபவங்களை, குழந்தைகளுக்கு வழங்குதல் மிகவும் முக்கியம். உதாரணமாக, சமையலறையில் சில பாதுகாப்பான பொருட்களை தொட குழந்தைகளை அனுமதிக்கலாம் மற்றும் மல்லிகை போன்ற மலர்களை முகர்ந்து பார்த்து அடையாளம் காணச் செய்து, அவர்களின் நுகர்தல் திறனை அதிகரிக்கலாம்.

## உச்சரிப்பு தொடர்பான விழிப்புணர்வு

குழந்தையிடம், பேசுதல், படித்துக் காட்டுதல் மற்றும் பாடுதல் மிகவும் முக்கியம். மேலும், பெற்றோர்கள்,ளுழரனெ பயஅநள உள்ளிட்டவைகளையும் விளையாடுவது அவசியம். வெவ்வேறு விலங்குகள் மற்றும் பறவைகள் எவ்வாறு சத்தம் எழுப்புகின்றன என்ற அறிவை குழந்தைகளுக்கு புகட்டுவதும் அவசியம்.

## சுற்றுச்சூழல் கற்பிதம்

ஒரு குழந்தை அன்றாடம் பார்க்கும் நிகழ்வுகள் சம்பந்தப்பட்டதாகும் இது. உதாரணமாக, குழந்தைகள் விளையாடும் பொம்மைகள் மற்றும் அவர்களுக்கான பால்புட்டிகள் மற்றும் இதர உணவு டப்பாக்கள் ஆகியவற்றில் ஒட்டப்பட்ட லேபிள்கள் போன்றவை முக்கியமானவை. பெற்றோர்கள், இவற்றை படித்துக்காட்டி, அதுதொடர்பான விழிப்புணர்வை குழந்தைகளுக்கு கொடுக்க வேண்டும்.

## உரையாடுதல்

குழந்தைகளுடன் உரையாடுதல் மிகவும் முக்கியமான ஒன்றாகும். உதாரணமாக, குழந்தையை குளிப்பாட்டுகையில், சோப்பு மற்றும் ஷாம்பு பற்றியோ, அதன் வாசனைப் பற்றியோ, நீரின் கொதிநிலைப் பற்றியோ அவர்களுடன் பேசலாம். அதேசமயம், இதற்கு, அவர்களுடைய பதிலுக்கும் நீங்கள் பொறுமையாக காத்திருக்க வேண்டும். குளிக்கும்போது மட்டுமின்றி, அதைப்போன்ற ஒவ்வொரு தருணத்திலும், குழந்தையிடம், உங்களின் வேலையை செய்து கொண்டே, அதைப்பற்றி பேசலாம்.

## ஒரு குறிப்பிட்ட பொருளை சுட்டுதல்

குழந்தையிடம் நீங்கள் இருக்கும்போது, நீங்கள் இருவரும் எதிரே பார்க்கும் விஷயத்தைப் பற்றி, அதன் பெயர், நிறம், அம்சம், அளவு மற்றும் வடிவமைப்பு குறித்து குழந்தைக்கு விளக்கலாம். இதன்மூலம், குழந்தையின் அறிவு விரிவடைகிறது.

## பாடல் மற்றும் விரல் விளையாட்டு

குழந்தைகளுக்கு, பாடல்களையும், நகர்வுகளையும் சொல்லித் தருவதன் மூலம், அவர்களின் வார்த்தை வள (vocabulary) அறிவு, மொழியறிவு மற்றும் மோட்டார் (motor) திறன்கள் போன்றவை மேம்படுகின்றன.

## வார்த்தை வளம்

ஒரு சராசரி குழந்தை, தனது முதல் பிறந்தநாளின்போது, குறைந்தபட்சம் 50 வார்த்தைகளை தெரிந்திருக்கும். இந்த எண்ணிக்கை, 2ம் வருடத்தில் 300ஐ தொடும். எனவே, வார்த்தை வளத்தை மேம்படுத்திக் கொள்வதற்கான சூழலை உருவாக்குவது, ஒரு குழந்தையின் மொழி மேம்பாட்டில் மிகவும் முக்கியமான ஒன்றாகும்.

**மங்கள கீதம்,**
**அன்மருதை, திருவண்ணாமலை.**

# குழந்தை தொழிலாளர்கள் இல்லாத உலகம்

சக குழந்தைகள், புத்தக பையுடன் பள்ளி செல்லும்போது, சில குழந்தைகள் மட்டும் வேலைக்கு செல்கின்றனர். இவர்கள்தான் குழந்தை தொழிலாளர்கள். உலகில் குழந்தை தொழிலாளர் முறையை முற்றிலும் ஒழிக்கும் நோக்கத்துடன் ஜூன் 12ம் தேதி உலக குழந்தை தொழிலாளர் ஒழிப்பு தினம் கடைபிடிக்கப்படுகிறது. உலகில் 21 கோடி பேர், குழந்தை தொழிலாளர்களாக உள்ளனர். இதில் 11 கோடி பேர் பாதுகாப்பற்ற கஷ்டமான வேலைகளில் ஈடுபட்டுள்ளனர் என சர்வதேச தொழிலாளர் அமைப்பின் அறிக்கை தெரிவிக்கிறது. 2016ம் ஆண்டுக்குள் இதை அறவே ஒழிக்க வேண்டும் என்றும் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

## யார் குழந்தை தொழிலாளர்

உலகில் 5 முதல் 14 வயதுக்குட்பட்ட குழந்தைகளை வேலைக்கு அமர்த்துவது குற்றமாக உள்ளது. சில குழந்தைகள், பள்ளி முடித்தவுடனும், சிலர் பகுதி நேரமாகவும் வேலைக்குச் செல்கின்றனர். சிலர் பெற்றோர்களுக்கு உதவியாக இருக்கின்றனர். இவர்கள் குழந்தை தொழிலாளர்களாக கருதப்பட மாட்டார்கள். ஆனால் கல்வி, சுகாதாரம், அடிப்படை உரிமை, உடல், மனம், சமூகம் ஆகியவை பாதிக்கும் வகையில் குழந்தைகளை வேலையில் ஈடுபடுத்துவது குற்றம் என சர்வதேச தொழிலாளர் அமைப்பு வரையறுத்துள்ளது. இந்திய அரசும், 14 வயதுக்குட்பட்ட குழந்தைகளை பணியில் அமர்த்துவது குற்றம் என தெரிவிக்கிறது.

## இந்தியாவில் அதிகம்

உலக குழந்தை தொழிலாளர் எண்ணிக்கையில் 12 சதவீதம் பேர் இந்தியாவில் உள்ளனர். இது, இந்தியாவில் இப்பிரச்னை, எந்தளவு மோசமாக உள்ளது என்பதை காட்டுகிறது. விவசாயம், தீப்பெட்டி, செங்கல் சூளை, டெக்ஸ்டைல் உள்ளிட்ட தொழிற்சாலைகள், கட்டுமானப் பணிகள் ஆகியவற்றில் வேலையில் ஈடுபடுத்தப்படுகின்றனர். இவர்கள், குறைந்த ஊதியத்தில், விடுமுறை இன்றி ஒரு நாளைக்கு 12 மணி நேரத்துக்கும் மேல் வேலை பார்க்கின்றனர். பெரும்பாலான குழந்தைகள் குடும்ப சூழ்நிலை காரணமாகவும், சிலர் வற்புறுத்தல் காரணமாகவும் இந்த வேலைகளில் ஈடுபட்டுள்ளனர்.

## கல்வி அவசியம்

அனைத்து குழந்தைகளும் கல்வியறிவு பெறுவதை ஒவ்வொரு அரசும் உறுதி செய்ய வேண்டும். சில குழந்தைகள் குடும்ப வறுமை காரணமாக வேலைக்குச் செல்கின்றனர். முதலில் இக்குழந்தைகளின் பெற்றோர்களின் வருமானத்துக்கு அரசு சிறப்பு திட்டங்களை வகுக்க வேண்டும். வறுமை ஒழிந்து, அனைத்து குழந்தைகளுக்கும் கல்வி வசதி கிடைத்தால் குழந்தை தொழிலாளர் முறையை ஒழித்து விடலாம்.

**மசரெல்லோ மடம்,**
**திருப்பத்தூர், வேலூர்.**

# குழந்தைகளின் பாதுகாப்பில் சமூகத்தின் பங்கு

### முதலில் தெரிந்து கொள்ளுங்கள்

குழந்தைகளுக்கு இழைக்கப்படும் பாலியல் கொடுமை பற்றியும் அவர்களின் உரிமை பற்றியும்நிறையத் தெரிந்துக்கொள்வதன் மூலம் உங்கள் குடும்பத்திலும் அக்கம்பக்கத்திலும் உள்ளகுழந்தைகளை உங்களால் பாதுகாக்க முடியும். குழந்தைகள் உங்களிடம் சொல்வதைக் காதுகொடுத்துக் கேட்டு மனதில் இருத்துங்கள்.

### அடுத்து, சிந்தித்துப் பாருங்கள்

பாலியல் கொடுமைகள் நடப்பதற்கு நீங்கள் எந்த வகையிலேனும் காரணமாக இருக்கிறீர்களா என்றுசிந்தித்துப் பாருங்கள்.

### பின்னர் கற்றுக்கொடுங்கள்

குழந்தைகள் எங்கேயும் எப்போதும் பத்திரமாக உணர்வதற்குஅவர்களுக்கு உரிமை உண்டு என்று அறிவுறுத்துங்கள்.

### பேசுங்கள்

உங்களுடன் பணியாற்றுபவர்களோடும், நண்பர்களோடும், உறவினர்களோடும் மற்றஎல்லோரோடும் பேசுங்கள். குழந்தைக்கு இழைக்கப்படும் கொடுமை பற்றிய மௌனத்தைக்கலையுங்கள்.

### ஊக்கமூட்டுங்கள்

குழந்தைகளுக்கு அறிவுறுத்துவதற்காகவும் கொடுமைகள் நடைபெறாமல் தடுப்பதற்காகவும்எடுக்கப்படும் நடவடிக்கைகளுக்குக் கை கொடுங்கள். பெரும்பாலும் கொடுமை நடந்த பிறகே அதுவெளியே தெரிய வருகிறது.

### எடுத்துக்கூறுங்கள்

குழந்தைகள் தங்களைப் பாதுகாத்துக்கொள்வது எப்படி என்று கற்றுக்கொடுக்கும்படியும்அவர்களைப் பாதுகாக்கும்படியான திட்டங்களை மேற்கொள்ளும்படியும் பள்ளிகளிடம்எடுத்துக்கூறுங்கள்.

### உதவுங்கள்

ஒரு குழந்தை கொடுமைக்கு ஆளாவதாகத் தெரியவந்தால் அதற்கு உதவி அளியுங்கள். உடனே தொழில்முறையிலான உதவியை நாடுங்கள்.

### ஈடுபாடு காட்டுங்கள்

குழந்தைகளுக்கு இழைக்கப்படும் பாலியல் கொடுமைகளுக்கு எதிராகச் செயல்படும்நிறுவனங்களின் நடவடிக்கைகளில் நீங்களாக முன்வந்து பங்குகொள்ளுங்கள்.

**மசரெல்லோ மடம்,**
**மைக்கேல்புரம், விழுப்புரம்.**

# கவிதைகள்

குழந்தை எனும் வார்த்தையே அழகுதான். அதன் ஒவ்வொரு செய்கைகளும் சேட்டைகளும் பொக்கை வாய் புன்னகையும் செல்லக் கோபமும் ஏன் அழுகைக்கூட ஓர் அழகுதான் குழந்தையோடு இருக்கும் போது நேரம் செல்வதே தெரியாது. அவர்களைப் பற்றிய கவிதை படிப்பது என்றால், மகிழ்ச்சியும் புத்துணர்ச்சியும் சேர்த்து நம்மை தீண்டும். அந்த வகையான கவிதைகள் இதோ

## வாழ்வின் எதார்த்தங்கள்

நீ யாரை நேசிக்கிறாய் - என்று
தெரிய வேண்டுமா....
தனிமையில்....
நீ யாருடன் பேச நினைக்கின்றாயோ
அவர்களை தான்......
வாழ்க்கை பிடிக்கவில்லை - என
வெறுத்து விடாதீர்கள்....
வாழும் வாழ்க்கைக்கு
உங்களை விரும்ப
கற்றுக் கொடுங்கள்.....

நேசிப்பவர்கள்
எல்லோரும் நம்மோடு
நிலைத்துவிட்டால்.....
நினைவின் மொழியும்.....
பிரிவின் வலியும்......
தெரியாமல் போய்விடும்....
தனிமை கொஞ்சம்
வித்தியசமானது......
நாமே அதை எடுத்துக்
கொண்டாலும்.....
மற்றவர்கள் நமக்கு
கொடுத்தாலும்....
“கசக்கும்”......!
ரம்.....

**R. பிரிய தர்ஷினி**
7-ம் வகுப்பு,
திருவண்ணாமலை.

## முயற்சி

முயற்சி என்பது
விதை போல.....
அதை விதைத்து
கொண்டே இரு.....
முளைத்தால் மரம்....
இல்லையென்றால் - அது
மண்ணிற்கு வரம்.....

**ஐ.ஜோஸ்பின்**
10 - ம் வகுப்பு,
திருவண்ணாமலை.

## அம்மா

வார்தைகளே இல்லாத வடிவம்.....
அளவுகோலே இல்லாத அன்பு.....
சுயநலமே இல்லாத இதயம்.....
வெறுப்பை காட்டாத முகம் அம்மா....
குழந்தையின் அழுகையின் அர்த்தம் புரிந்த
அகராதி புத்தகம் அம்மா
ஆயிரம் சொந்தங்கள் அனைத்திட இருந்தாலும்
அன்னையே உன்னை போன்று அன்பு செய்ய
யாரும் இல்லை இந்த உலகில்....

**A. அலிஸ் சுருன்யர்**
8-ம் வகுப்பு,
விழுப்புரம்.

## சோர்ந்து விடாதே

விழுந்தால் அழாதே
எழுந்திரு....
தோற்றால் புலம்பாதே
போராடு.......
கிண்டலடித்தால் கலங்காதே
மன்னித்து விடு...
தள்ளினால் தலராதே
துள்ளியெழு...
ந்'டப்பட்டாள் நடுங்காதே
நிதனமாய் யோசி...
ஏமாந்துவிட்டால் ஏங்காதே
எதிர்த்து நில்....
நோய் வந்தால் நொந்து போகாதே
நம்பிக்கை வை.......
க்'டப்படுத்தினால் கதறாதே
கலங்காமலிரு.....
உதாசினப்படுத்தினால் உளறாதே
உயர்ந்து காட்டு....
கிடைக்காவிட்டால் குதிக்காதே
அடைந்து காட்டு....
மொத்தத்தில் நீ பலமாவாய்
சித்தத்தில் நீ பக்குவமாவாய்.....

**C. ராபர்ட் கெல்வின்**
8-ம் வகுப்பு,
விழுப்புரம்.

## விடா முயற்சி

சென்னையின் பீச்சில்
ஜல்லிகட்டிற்காக கோடி பேர்
குதித்து போராடிய போது
வெற்றி பெற்றது எதனால்?

தூத்துக்குடியில்
ஸ்டெர்லைட்டிற்கு எதிராக
போராடிய போது
வெற்றி பெற்றது எதனால்?

29 மாவட்டங்களில் மேற்க்கொள்ளப்பட்ட
மீத்தேன் வாயு திட்டத்திற்கு
எதிராக போராடிய போது
வெற்றி பெற்றது எதனால்?

சென்னையிலும் கேரளாவிலும்
வெள்ளம் வந்த போது
நாம் மீண்டு வந்தது எதனால்?

இவை அனைத்திற்கும் ஒரே விடை
"விடாமுயற்சி"
விடாமுயற்சியுடன் போராடுங்கள்
வெற்றி பெறுங்கள்......

**K. ராகவன்**
6-ம் வகுப்பு,
வேலூர்

## இயற்கை

காலத்தில் வசந்தம்
பசுமையின் அழகு....
மலையின் முழுமதி
மயக்கும் அழகு....
மழை மேக எதிர் ஒளி
வானவில் அழகு....
வென்பனி இமையம்
வெயிலின் அழகு...
வெண்குழல் நயகரா
சிந்திடும் நீர் துளி அழகு.....
பச்சினம் குழந்தையின்
புன்னைகை அழகு..
கடல் வெளிப் பரப்பின்'
அலைகள் அழகு...
இயற்கை மொத்தத்தில்
முழு அழகு....

**K. தீபிக்கா**
7-ம் வகுப்பு,
வேலூர்

## உழவன்

ஏர் ஒட்டின வயலினிலே
தார் ஒட்டும் காலமடா....
நஞ்சை காட்டி நெஞ்சினிலே
நஞ்சு விதைக்கும் உலகமடா.....

சோறு போட்ட காலத்தில் உழவன்
இன்று அவன் பெயர் கிழவன்....
குளிரிலும் இவனுக்கில்லை போர்வை
நிலம் முழுவதும் இவனது வேர்வை.....

இன்றில்லை இவனுக்கு மதிப்பு
அரசுக்கும் புரியலை இவன் கொதிப்பு
ஒரு நாள் நிச்சயம் பசிக்கும்
அன்றே இவன் பணி ருசிக்கும்......

**S. மாதவன்**
7-ம் வகுப்பு,
வேலூர்

## நிலா

உனக்காக
ஏங்கி நின்றேன்,
எங்கெங்கோ,
தேடிப் பார்த்தேன்...

முகிலின் மடியில்
தேடிப்பார்த்தேன்,
தொடுவான எல்லைத்
தாண்டிப் பார்த்தேன்.....

கிணற்றின் அடியில்
எட்டிப்பார்தேன்,
குளத்தில் கொஞ்சம்,
மூழ்கிப் பார்தேன்.....

நான் தேடாத
இடமுமில்லை,
தேடிப் பார்த்த
தடமுமில்லை....

உன்னை காணா
ஏக்கமதில்,
தூக்கமில்லை,
கண்களிலே......

என் தூக்கமெல்லாம்
கலைத்து விட்டு,
துயில் கொள்ளப்,
போனாயோ வெண்ணிலாவே.....!

**S. தீபிகா**
8-ம் வகுப்பு,
வேலூர்

## என் நண்பன்

என் கண்ணீர் துடைத்தது,
என் வறுமை போக்கியது,
என் கல்வி உதவியது,
என் மனம் பக்குவபடுத்தியது,
என் வாழ்வை உயர்த்தியது,
என் பதவி நிலைநிறுத்தியது,
என் மகிழ்ச்சி நிறந்தரமாக்கியது,
என் உயிர், சுவாசம், எண்ணம்....
என் உலகம் புனிதமான என் நண்பன்.....!

**S. அபிநயா**
10-ம் வகுப்பு,
ஈரோடு

## தோல்வி

நண்பர்களிடம்
தோற்றுப்பாருங்கள்
வெற்றியை விட
தோல்வி
எத்தனை சுகம்
என்று தெரியும்.......!

**R. சந்தோஷ்**
7-ம் வகுப்பு,
ஈரோடு

## குழந்தைகள்


ஆறுதல் கூட
சொல்லத் தெரியாது
ஆனால் நிறைய
கவலைகளை மறக்க
செய்கின்றனர்.....!!

**C. ராபர்ட் கெல்வின்**
8-ம் வகுப்பு,
விழுப்புரம்

## கட்டுரைகள்

### முன்னுரை:

தென்னாட்டு காந்தி என்று அன்போடு மக்களால் அழைக்கப்பட்டார் கர்மவீரர். காமராஜர் தன்னலம் கருதாது பொதுநலம் கருதிய தலைவர்களுள் ஒருவர் இவர். ஏழை குடும்பத்தில் பிறந்து தன்னிநிகரில்லா தலைவராக உயர்ந்த உத்தமர்.



### பிறப்பு இளமைப்பருவம்:

1903 - ம் ஆண்டு தமிழகத்தில் உள்ள் விருதுநகரில் பிறந்தார். இவரது தந்தை குமாரசாமி தாய் சிவகாமி அம்மாள். இளம் வயதிலேயே தாய் நாட்டின் மீது பற்றுக் கொண்டார். அதனால் பலமுறை சிறைசாலைக்கு சென்றார். இந்திய நாட்டின் மீது அளவற்ற அன்பு கொண்டிருந்த காமராஜர் நாட்டு மக்களை வெகுவாக நேசித்தார். அவர் பள்ளிக்கூடம் சென்று படித்ததில்லை. இருப்பினும் தமிழகத்தில் ஏழைகள் உட்பட அனைவரும் கல்வி கற்க வேண்டும் என்று ஆசை கொண்டார்.

### தமிழக முதல்வரானார்:

முத்தறிஞர் இராஜாஜி தமிழக முதல்வர் பதவியிலிருந்து விலகிய காரணத்தினால் 1954-ம் ஆண்டு கர்மவீரர் காமராஜர் தமிழக முதல்வராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். தன் நாட்டு மக்களின் நலனுக்காக பாடுபட்ட இவர் தன் வாழ்நாளில் திருமணமே செய்து கொள்ளாமல் பிறர்க்கெனவே வாழ்ந்தார்.

தான் முதல்வராக பதவி வகித்த காலத்தில் ஓர் கிராமத்தில் ஏழை சிறுவன் மாடு மேய்த்துக் கொண்டிருப்பதை கண்டார். அச்சிறுவனிடம் பள்ளிக்கூடம் சென்று படிக்காததின் காரணத்தைக் கேட்டார். அந்த சிறுவனோ "பள்ளிக்கூடம் சென்றால் எனக்கு உணவு கிடைக்காது. மாடு மேய்த்தால் தான் எனக்கு உணவு கிடைக்கும். என்று பதில் கூறினான். அந்த பதில் காமராஜரின் உள்ளத்தைத் தைத்தன. உடனடியாக அரசு பள்ளிகளில் மதிய உணவு திட்டத்தை அமல்படுத்தினார்.

தன்னலம் கருதாது நாட்டு மக்களின் நலன் ஒன்றையே பெரிதும் நினைத்து பாடுப்பட்டார். அதனால் தான் காமராஜரை "படிக்காத மேதை," "கர்மவீரர்," "கருப்பு காந்தி," "ஏழைகளின் நண்பன்" என்று மக்கள் சிறப்பு பெயர்கள் கூறி அழைத்தனர்.

தமிழகத்தின் பொற்காலம்:

மக்களின் நலன் ஒன்றை மட்டுமே கருத்தில் கொண்டு ஆட்சி நடத்தினார். அதனால் இவர் தமிழகத்தின் முதல்வராக பதவி வகித்த ஒன்பது ஆண்டுகளும் தமிழகத்தின் பொற்காலம் என்று பலர் கூறுவதுண்டு. ஒரு நாட்டின் கிராமங்கள் வளர்ச்சி அடைந்தால் தான் அந்நாடு வளம் பெறும் என்ற காந்தியடிகளின் கூற்றை தானும் மேற்கொண்டார். காமராஜர் கிராம மக்கள் அனைவரும் கல்வி கற்க வேண்டும் என்ற உயரிய நோக்கில் அனைத்து கிராமங்களிலும் பள்ளிகள் திறக்கச் செய்தார்.

ஏழைகள், செல்வந்தர்கள் பாகுபாடு நீங்க வேண்டும் என்ற எண்ணத்தில் பள்ளிக்கூடங்களில் சீருடை திட்டத்தை ஏற்பப்படுத்தினார். தமிழ்நாட்டின் வளர்ச்சிக்காகப் பாடுப்பட்டார்.

அவர் காலத்தில் தமிழகத்தில் தொடங்கப்பட்ட முக்கிய பொதுத் துறை நிறுவனங்களும் பெருந்தொழிற்சாலைகளும்.

1. பாரத மிகு மின் நிறுவனம்.
2. நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனம்.
3. மணலி சென்னை சுத்திகரிப்பு நிலையம் (CPCL).
4. இரயில்பெட்டி இணைப்புத் தொழிற்சாலை. (ICF).
5. நீலகிரி புகைப்படச் சுருள் தொழிற்சாலை.
6. கிண்டி மருத்துவ சோதனைக் கருவிகள் தொழிற்சாலை.
7. மேட்டூர் காகிதத் தொழிற்சாலை.

### அனைவரின் அன்பாளர்:

காமராஜர் காங்கிரஸ் கட்சியை தழுவியிருந்தாலும் முதல்வர் பதவியிலிருந்து விலகிய பின்பும் மற்ற எல்லா அரசியல் கட்சி தலைவர்களின் மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரியாரகவே திகழ்ந்தவர் இதிலிருந்து கட்சி வேறுபாடு இன்றி எல்லோருடைய மனதிலும் இடம் பெற்றவர் காமராஜர் என்பது உறுதியாகிறது. முதல்வர் பதவியிலிருந்த போதும் காமராஜர் மிகவும் எளிமையான வாழ்க்கையை வாழ்ந்தார். தனக்கென்று சொத்துக்களோ அல்லது பொருட்களோ சேர்த்து வைக்காமல் வாழ்ந்தவர். அவருடைய இறுதி காலம் வரை வாடகை வீட்டில் தான் வசித்தார். அவர் விட்டுப்போன சொத்துகள் இரண்டு சட்டை, இரண்டு வேட்டி மற்றும் நினைவுகள் மட்டுமே.

### முடிவுரை:

மக்களின் பெருமதிப்பிற்கும் மரியாதைக்கும் உரிய பெருந்தலைவர் காமராஜர் 1975 - ம் ஆண்டு இவ்வுலகை விட்டு மறைந்தார்.

**B. லத்திக்கா**
8-ம் வகுப்பு,
ஈரோடு.

## பேரறிஞர் அண்ணா



### முன்னுரை:

பண்புள்ளம் கொண்ட அறிஞர்களால் தான் உலகியல் இன்றும் தொடர்ந்து நடைப்பெறுகிறது. அத்தகைய அறிஞர்களில் ஒருவராகத் திகழ்ந்தவர் பேரறிஞர் அண்ணா

### அண்ணாவின் தோற்றம்:

1909 - ஆம் ஆண்டு காஞ்சிபுரம் மாவட்டத்தில் தந்தை நடராசருக்கும் தாய் பங்காரு அம்மையாருக்கும் மகனாக பிறந்தார். காஞ்சிபுரம் மாநகராட்சியில் எழுத்தாளராகப் பணிபுரிந்தார். பின்னர் சென்னை பச்சையப்பன் கல்லூரியில் பொருளாதாரத்தைப் படித்து பட்டம் பெற்றார். 1930 - ஆம் ஆண்டு முதுகலை பட்டம் பெற்றார்.



# பேரறிஞர் அண்ணா

**இலக்கியப் பணி:**

அறிஞர் அண்ணா மிகச்சிறந்த எழுத்தாளரும், பேச்சாளரும் ஆவார். 1942 - ஆம் ஆண்டின் போர்வாள் மற்றும் திராவிட நாடு போன்ற பத்திரிக்கைகளை நடத்தி இளைஞர்களிடையே பத்திரிக்கை பதிக்கும் ஆர்வத்தை ஆர்வத்தை வளர்த்தார் இவர், எழுத்து பேச்சு முறை இளைஞர்கிடையே படிக்கும், கேட்கும் ஆர்வத்தை வளர்த்தது. இவர் ரங்கோன் ராதா, குமாஸ்தா மகள், கங்கைராணி போன்ற பல நாவல்களையும், கம்பரசம், ஆரியமாலை, குமரிக்கோட்டம், பணத்தோட்டம் போன்ற நூல்களையும் எழுதினார்.

**கலைத்துறை:**

நீதி தேவன் மயக்கம், ஓர் இரவு, வேலைக்காரி, காதல் ஜோதி முதலிய நாடகங்களை தயாரித் தும், தானே நடித்தும் மக்கள் இடையே பகுத்தறிவு கொள்கையைப் பரப்பினார்.

**அரசியல் வாழ்க்கை:**

1949 - ஆம் ஆண்டு பெரியாரின் திராவிடக் கழகத்திலிருந்து பிரிந்து திராவிட முன்னேற்றக் கழகம் என்ற புதிய கட்சியைத் துவங்கினார். 1957 - ஆம் ஆண்டு சட்ட மன்ற உறுப்பினர் ஆனார். 1967 - ஆம் ஆண்டு தமிழக முதல்வரானார். சென்னையில் இரண்டாம் உலகப் தமிழர் மாநாட்டை சிறப்பாக நடத்தினார் சென்னை மாநிலம் என்ற பெயரை மாற்றி தமிழ்நாடு என அழைக்கச் செய்ததன் மூலம் நம் தமிழ் மக்களின் நெடு நாளைய கோரிக்கையை நிறைவேறச் செய்தார்.

**முடிவுரை:**

தமிழகத்தின் “பெர்னாட்சா” என்று அழைக்கப்பட்ட அறிஞர் அண்ணா தான் என்ற ஆணவம் இல்லாத தன்னடக்கம் உள்ள எளிமையான தோற்றம் கொண்டவர். கடமை, கண்ணியம், கட்டுபாடு என்ற முப்பெருங் கொள்கையை தம் கட்சியினருக்கு போதித்து தானும் அதனை கடைபிடித்தார். இவர் 1969 - ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 3 - ஆம் நாள் இவ்வுலகை விட்டு மறைந்தார்.

**P. ஏழிலரசன்**
10-ம் வகுப்பு,
விழுப்புரம்.

## குழந்தை தொழிலாளர் ஒழிப்பு

### முன்னுரை:



இளமையில் கல் என்பது முதுமொழி. பள்ளிக்கு செல்ல வேண்டிய வயதில் குழந்தைகள் வேலைக்கு அனுப்பப்படுகின்றார்கள். இதனால் அவர்கள் படிப்பறிவை பெற தவறுவதோடு வாழ்க்கைக்கு தேவையான அறிவைப் பெறவும் இயலாமல் போகிறது. குழந்தைகளை வேலைக்கு அனுப்புவதை தடுக்கவே குழந்தை தொழிலாளர் ஒழிப்பு முறை கொண்டுவரப்பட்டது.

### குழந்தைகள் வேலைக்கு அமர்த்தப்படும் இடங்கள்:

குழந்தைத் தொழிலாளர் முறை உலகின் பல்வேறு பகுதிகளிலும், தொழிற்சாலை மற்றும் சுரங்கங்களிலும் உள்ளது. பாலியல் தொழில், குவாரி, விவசாயப் பெற்றோரின் தொழிலில் உதவுதல் மற்றும் சிறிய வணிக கடைகளில் குழந்தைத் தொழிலாளர்கள் வேலைக்கு அமர்த்தப்படுகின்றார்கள். சில குழந்தைகள் சுற்றுலா வழிகாட்டியாகவும், ஒட்டல் மற்றும் கடைகளில் உதவியாளர்களாகவும் வேலை செய்கின்றார்கள். சில குழந்தைகள் அட்டை தயாரித்தல், காலனிகளை பாலீ' செய்தல், சுத்தம் செய்தல், திப்பெட்டி தயரித்தல், பட்டாசு தயாரித்தல் போன்ற கடினமான வேலையில் வலுக்கட்டாயமாக ஈடுப்படுத்தபடுகின்றார்கள்.

### வறுமையே காரணம்:

இளம் வயதில் குழந்தைகளுக்கு வாழ்க்கையைப் பற்றி விழிப்புணர்வு இருப்பதில்லை. எதை செய்ய வேண்டும் என்பது தெரியாது. எனவே அவர்களை வழி நடத்தும் பொறுப்பு பெற்றோர்கும் சமுகத்திற்கும் உரியது. சில குடும்பங்களில் தந்தை மதுவுக்கு அடிமையாகி குழந்தைகள் பணிக்குச் செல்லும் கட்டாயத்திற்கு ஆளாக்கப்படுகின்றார்கள்.

பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை வேலைக்கு செய்ய வற்ப்புறுத்துவது பெரும்பாலும் வறுமையின் காரணமே சிலர் பணத்தின் ஆசையால் குழந்தைகளை வேலைக்கு அனுப்புகிறார்கள் நம் கர்மவீரர் காமராஜர் அவர்கள் ஏழ்மையினால் குழந்தைகளின் கல்வி தடைப்பட கூடாது என்பதற்காக பள்ளிகளில் மதிய உணவு திட்டத்தை அறிமுகப்படுத்தினார். இருப்பினும் இன்றும் வறுமையினால் வேலைகளுக்கு செல்லும் குழந்தைகள் நம் பகுதியில் இருக்கத்தான் செய்கிறார்கள்.

### குழந்தை தொழிளாலர்களின் மனநிலை:

சக குழந்தைகள் புத்தக பையுடன் பள்ளி செல்லும் போது, சில குழந்தைகள் மட்டும் வேலைக்கு செல்கின்றார்கள். இந்த அவலம் இன்றும் உலகளவில் அரங்கேறிக் கொண்டு தான் இருக்கின்றது. குழந்தைகள் வேலைக்கு செல்லும் போது நாம் படிக்க முடியவில்லையே என்ற ஏக்கம் அவர்களுக்குள் உள்ளது. ஆனால் அதனை வெளிகாட்ட

முடியாமல் தவிக்கின்றனர். ஒரு கடமையாளராக குழந்தை தொழிலாளர்களை ஒழிப்பதில் வெறும் விழிப்புணர்வு மட்டும் செய்தால் போதாது. அனைத்து குழந்தைகளும் கல்வியறிவு பெறுவதை ஒவ்வொரு அரசும் உறுதி செய்ய வேண்டும். முதலில் இக் குழந்தைகளின் பெற்றோர்களின் வருமானத்திற்கு அரசு சிறப்பு திட்டங்களை வகுக்க வேண்டும்.

**குழந்தை தொழிலாளர் பாதுகாத்தல்:**

நாளைய சமூகம் சிறப்பாக அமைவதில் மிக முக்கிய பங்கு இன்றைய சீறார்களிடம் தான் உள்ளது. என்பதை மறுப்பதற்கில்லை அப்படிப்பட்ட சிறார்களின் பருவம் குழந்தைகள் சமூகத்தை உள்ளடக்கியது. இந்த குழந்தை சமூகம் மனிதம் என்ற மேன்மைத் தன்மையை உயர்த்தி பிடிப்பதாகவும் திறமையுடன் கூடிய செயல்பாடு கொண்டதாகவும் உருவாக்க வேண்டியது இன்றைய சமூகத்தின் தலையாய கடமை.

**குழந்தை தொழிலார்கள் சார்ந்த சட்டங்கள்:**

1. 1948, தொழிற்சாலைகள் சட்டம்
2. 1952, சுரங்க சட்டம்.
3. 1986, குழந்தை தொழிலாளர்கள் (தடை மற்றும் இரங்குமுறை) சட்டம்.
4. குழந்தைகள் இளம் நீதி (பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) 2000 சட்டம்.
5. அனைத்து குழந்தைகளுக்கும் இலவச மற்றும் கட்டாய கல்வி சட்டம், 2009.

**குழந்தை தொழிலாளர்களுக்கு ஏற்ப்படும் பாதிப்புகள்:**

குழந்தைகள் நலனுக்காக சர்வதேச அமைப்பான யுனிசெப் நிறுவனம் குழந்தை தொழிலாளர்களுக்கு ஏற்படும் பாதிப்புகளை மூன்று வகையாக பிரித்துள்ளது.

1. உடல் ரீதியான பாதிப்பு
2. மன ரீதியான பாதிப்பு
3. சமூக ரீதியான பாதிப்பு

**முடிவுரை:**

ஒரு நாட்டின் அதன் குழந்தைகளிடம் இருக்கிறது என்பதை யாரும் புரிந்து கொள்ளுவதில்லை குழந்தைகள் பெற வேண்டிய கல்வியை அவர்களுக்கு அளிக்க வேண்டிய பொறுப்பு இந்த சமூதாயத்தில் உள்ள ஒவ்வொரு மனிதருக்கும் உரியது என்பதை அறிந்து அவர்களை பள்ளிக்கு அனுப்புவதை உறுதி செய்ய வேண்டும்.

.

**A. யுகேந்திரன்**
8-ம் வகுப்பு,
திருவண்ணாமலை.



## குழந்தைகளுக்கு உகந்த உலகம்

**முன்னுரை:**

குதூகலம் நிறைந்தது குழந்தைப் பருவம், துள்ளலும், மகிழ்ச்சியும் ததும்பி சிறகடித்துப் பறக்கும் வாழ்வு. கவலைகள், ஏற்றத்தாழ்வுகள் அறியாத தூய்மையான மனம் இது போன்ற குழந்தைகளுக்கான உலகத்தில் தான் இன்றைய குழந்தைகள் வளர்கின்றார்களா? பெற்றோர், கல்வி கூடம் சமூகம் அகிய தளங்களில் வலம் வரும் குழந்தைகள் இன்றைக்கு எப்படி வடிவமைக்கப்படுகிறார்கள்? குழந்தைகளின் உணர்வுகள், உரிமைகள் இன்றைக்கு எந்த அளவுக்கு மதிக்கப்படுகின்றன? இந்தக் கேள்விகளுக்கான தேடலில் புகுந்தால் அதிர்ச்சியும் கவலையுமே அதிகரிக்கின்றன. பிறக்கும் ஒவ்வொரு குழந்தைக்கும் கல்வியும் சுகாதாராமும் அளிப்பதாக நமது அரசு உத்தரவாதம் அளித்துள்ளது. ஆனால் நடைமுறையில் இவை இரண்டும் குழந்தைகள் விலை கொடுத்து வாங்கும் பொருட்களாகவே உள்ளன. பிரிட்டன், அமெரிக்கா, ஜப்பான் உள்ளிட்ட 65 நாடுகளில் கல்வி இலவசமாக கிடைக்கிறது. கல்வி மற்றும் சுகாதாரத்திற்கு அங்கு பணம் செலவழிக்க வேண்டியதில்லை, ஆனால் சுதந்திரம் அடைந்து 60 ஆண்டுகள் கடந்த பின்னரே இந்தியாவில் கல்வி உரிமைச் சட்டம் அமல்படுத்தப்பட்டுள்ளது. அதுவும் முழுமையாக அமல்படுத்தப்பட்டதா என்று கேள்விக்குறி.

**குழந்தைகளின் பாதுகாப்பு:**

குழந்தைகளுக்கு எதிராக நடைபெறும் வன்முறை, சுரண்டல், தீங்கிளைத்தல் மற்றும் புறக்கணிப்பு ஆகியவற்றில் இருந்து அவர்களை பாதுகாத்து குழந்தைகள் ஆரோக்கியமாக உயிர் வாழ மற்றும் உடல், மன வளர்ச்சி பெற்று தனித்தன்மையுடன் வளர தகுந்த சூழலை உருவாக்கி தர வேண்டும்.

**குழந்தைகளின் ஆதங்கம்:**

நியாயத்திற்காக, தர்மத்திற்காக உறவுகளை பேணிய நிலை மாறிவிட்டது. லாபத்துக்காக உறவுகளைப் பேணுவர்களாக குழந்தைகள் மாற்றப்படுகின்றனர். இப்படியான வணிக கலாசாரத்தை நோக்கி குழந்தைகள் உருவாக்கப்படுவது மாபெரும் ஆபத்து. வருங்கால வருமானத்திற்காக முதலீடாக குழந்தைகள் பெற்றோர்கள் கருதப்படுகின்றார்கள்.

பாசமும் நேசமும் கலந்த குழந்தை வளர்ப்பு இன்றில்லை அதிக ஊதியம் தரகூடியத் துறைகளில் வேலைவாய்பையும், வெளிநாட்டுப் பணிகளையும் இலக்காகக் கொண்டதாக குழந்தை வளர்ப்பு மாறிவிட்டது. இதற்காக காலையில் டியூஷன், மாலையிலும் டியூஷன் என குழந்தைகளின் உணர்வுகளைப் புரிந்து கொள்ளாமல் அவர்களை இயந்திரமாக்கி அவர்கள் மீது மறைமுக வன்முறை அன்றாடம் நிகழ்த்தப்படுகிறது இதற்கிடையில் குழந்தைகளுக்கு உகந்த உலகம் எது?

## குழந்தைகளின் உரிமைகள்:

குழந்தைகளின் உரிமைகள் வாழ்வதற்கான உரிமை, வளர்ச்சிக்கான உரிமை, பாதூக்காப்பிற்கான உரிமை மற்றும் பங்கேற்பதற்கான உரிமை. இந்த உரிமைகள் அனைத்தும் கேட்பதற்கு இனிமையாக இருக்கிறது. ஆனால் பணக்காரக் குழந்தைகளுக்கு இவையனைத்தும் செயல்ப்படுத்தபடலாம். ஆனால் ஏழை குழந்தைகளின் அன்றாட வாழ்வின் உணவு கிடைப்பதே கடினமாக உள்ளது. இதற்கிடையில் உரிமைகளை பற்றி அவர்கள் மத்தியில் பேசுவதோ அல்லது நடைமுறைப்படுத்துவதோ கடினம். அப்படியென்றால் இந்த உரிமைகள் அனைத்தும் அனைத்து குழந்தைகளுக்கும் சென்று சேரும் பட்சத்தில் குழந்தைகளுக்கு உகந்த உலகமான மாறும்.

## குழந்தைக்களுக்கு எதிரான வன்முறைகள்:

இன்றைய காலகட்டத்தில் குழந்தைகளுக்கு எதிரான வன்முறையில் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே இருக்கிறது. எனவே குழந்தைகளுக்கு போதுமான பாதுகாப்பில்லை ஆவர்கள் உனருகிறார்கள். இந்த வன்முறைகள் அனைத்தும் தமக்கு நெருக்கமான நபர்களால் நடக்கிறது என்கின்ற போது. குழந்தைகளுக்கு யாரிடம் சொல்வது என்று தெரியாமல் தத்தளிர்கின்றார்கள். எனவே குழந்தைகள் அனைவரும் உடல் ரீதியாகவும், மன ரீதியாகவும் மற்றும் பாலியல் ரீதியாக பாதுகாக்கப்பட்ட உலகம் குழந்தைகளுக்கு உகந்த உலகமாக இருக்கும்.

## முடிவுரை:

குழந்தைகளுக்கு குடும்பத்தின் கஷ்ட நஷ்டங்களில் சொல்லிக் கொடுப்பது விட்டில் உள்ள சிறு சிறு வேலையில் அவர்களை பயிற்று விப்பது என இயல்பாக இருந்த காரியங்கள் தற்போது நாகரிகம் என்ற பெயரில் மறைந்து வருகின்றன. ஒரு நாட்டின் எதிர்காலம் அதன் குழந்தைகளிடம் இருக்கிறது. என்பதை எல்லோரும் புரிந்து கொள்ள வேண்டும். குழந்தைகளை பாதுகாக்கும் கடமை இந்த சமூகத்திற்கு உள்ளது. அனைத்து குழந்தைகளுக்கு கல்வி, சுகாதாரம், ஊட்டசத்து என்று அவர்களுக்கு கிடைக்க வேண்டியதை தரும் கடமை அரசுயுடையது. எனவே இவை அனைத்தும் குழந்தைகளுக்கு கிடைக்கும் போது குழந்தைகளுக்கு உகந்த உலகமாக மாறும்.

**R. அபிநயா**
8-ம் வகுப்பு,
வேலூர்.




## பெண்கள் முன்னேற்றம்

**முன்னுரை:**

கடவுள் மனித இடத்தை படைக்கும் போதே ஆண், பெண் என்று இரு பாலினத்தவராக படைத்தான் ஆணுக்கும் பெண்ணுக்கும் உடலால் சில உறுப்புகளால் வேறுபாடு இருந்தாலும் அவர்களின் அறிவு, ஆற்றல் பெருமைகளில் கடவுள் வேறுபாடு காட்டவில்லை. பெண்கள் முன்னேற்றத்திற்காக பல சீர்திருத்தவாதிகள் பாடுபட்டனர், வெற்றியும் கண்டனர். கடந்த சில ஆண்களில் பெண்கள் சமூகம், அரசியல் மற்றும் பொருளாதார தளங்களில் பெண்கள் நிகழ்த்திய சாதனைகள் அவர்களை முன்னேற்றத்திற்கு பக்கபலமாக இருந்தது இன்றைய காலகட்டத்தில் பெண்கள் சமுதாயத்தில் எட்டாத, அடைய முடியாத துறைகள் எதுவும் இல்லை. இன்றைய நவீன தலைமுறை சமுதாயப் பெண்கள் அடைந்துள்ள முன்னேற்றம் மனித சமுதாயத்திற்கு பெருமை தருகின்றது. அப்பெண்களின் முன்னேற்றம் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

**பண்டையக் காலத்தில் பெண்களின் நிலை:**

பண்டையக் காலத்தில் பெண்கள் சிலர் கல்வி, வீரம், தேசப்பற்று, உழைப்பு மற்றும் புலமை போன்றவற்றில் சிறந்து விளங்கினாலும். அவர்களை அடிமைகளாகவே கருதினர். அவர்களை பொம்மைகளாகவே பயன்படுத்தினர். ஆனால் மக்கள் அறிந்தோ அறியாமலோ பெண்களை அவர்களே பெறுமைபடுத்தினார்கள் அதாவது. தாய்நாடு, தாய்மொழி, தாயிற் சிறந்தது கோயிலும் இல்லை என்றனர். பெண்களை கடவுளுக்கு நிகராக கூறினார்கள்.

## இன்றைய பெண்களின் முன்னேற்றம்:

பெண்கள் முன்னேற்றமே குடும்ப முன்னேற்றம், சமுதாயத்தில் முன்னேற்றம். சமுதாயத்தின் முன்னேற்றமே நாட்டின் முன்னேற்றம் என்பதை மக்கள் உணர்ந்தார்கள். பெண் கல்வி வளர்ந்தது பெண்கள் படித்துப் பட்டம் பெற்றனர் எல்லாத் துறைகளிலும் முன்னேறினார்கள். எழுத்தாளர் பணியிலிருந்து இந்திய ஆட்சிப்பணி வரை பெண்கள் இடம் பெற்றுள்ளனர். பெண்களின் உயர்விற்கும் உரிமைக்கும் பல சட்டங்கள் இயற்றப்பட்டுள்ளன. "மங்கையராகப் பிறப்பதற்கே. நல்ல மாதவம் செய்திடல் வேண்டுமம்மா." என்ற அளவிற்கு முன்னேறியுள்ளார்கள்.

## நாட்டு வளர்ச்சியில் பெண்களின் பங்கு:

கல்வி கற்ற பெண்கள் பல நாடுகளுக்கு பயணம் செய்து அறிவின் மேன்மையை அங்கு கற்ப்பித்து புகழ்பெற்றனர். அங்குள்ள புதுமைகளை அறிந்துக் கொண்டு நம் நாட்டின் வளர்ச்சிக்கு பயன்படுத்தினார்கள். நம் நாட்டின் வளர்ச்சிக்கு நலத்திற்கும் பெரும் உதவியாக இருந்தார்கள்.

## புதுமைப் பெண்கள்:

கல்வி பெற்ற, ஆளுமைப் பெற்ற, சுதந்திர உணர்வுடைய, அச்சமற்ற, ஆணுக்கு நிகராக அனைத்துத் துறைகளிலும் வெற்றியுடன் வளம் வருகிறார்கள். பட்டங்கள் ஆள்வதற்கும், சட்டங்கள் அவர்களை பாதுகாப்பதற்கும் என்று விழிப்புடன் இருக்கின்றார்கள். தற்போது பெண்கள் கல்வி அறிவு பெற்று ஆட்சித்துறை, தொழில்துறை, அறிவியல் துறை, மருத்துவத் துறை, சட்டத் துறை, காவல் துறை, இலக்கியத்துறை போன்ற துறைகளில் பணியாற்றுவதுடன் வெற்றி நடை போடுகிறார்கள்.

## பெண்களின் வளர்ச்சி பயணம்:

புதுமைப் பெண்களாக, புரட்சி பெண்களாக, துப்பாக்கி ஏந்தி போரிடும் வீராங்கனைகளாக, அறிவூட்டும் ஆசானாக, ஒப்பற்ற இல்லத்தலைவியாக, விண்வெளி ஆராய்ச்சியாளாராக, தகவல் தொடர்பு வல்லுனர்களாக என அனைத்துத் துறைகளிலும் பெண்கள் இன்று சிறந்து விளங்குகிறார்கள்.

## முடிவுரை:

பெண்கள் முன்னேற்றமே நாட்டின் முன்னேற்றம் என்பதை நன்கறிந்து வளர்ச்சி பணியில் ஈடுபட்டு தாங்களும் வாழ்ந்து பிறரும் வாழ வழி செய்கிறார்கள். முன்னேற்ற பாதையில் முனைந்து சென்று நாடு உயர, மேண்மையுர தங்களை அர்ப்பணிக்கின்றனர். பெண்களால் வீடும், சமூகமும், நாடும், உலகும் முன்னேறுவது இன்றைய நிலை. இப்படி தன்னையும், உறவையும், ஊரையும் முன்னேற்ற பெண்கள் இன்னும் போராடிக் கொண்டுதான் இருக்கிறார்கள். எந்த சவாலையும் எதிர்கொள்ளவும் வெற்றிப் பெறவும் வல்லமை பெற்றதால் தான் பெண் சக்தியாளார்

**J. பேரரசன்**
8-ம் வகுப்பு,
வேலூர்.

## விடுகதைகள்

1. அடித்தாலும் உடைத்தாலும் அவன் அழ மாட்டான் அவன் யார்?

   விடை: பந்து

2. ஆடும் வரை ஆட்டம், ஆடிய பின் ஓட்டம் அது என்ன?

   விடை: இதயம்

3. குடை விரிக்கும் பயிர் உண்டு, விதை எங்கே தெரியாது அது என்ன?

   விடை: எலி

4. சொம்பு நிறையக் கம்பு தொட்டுப் புட்டா வம்பு அது என்ன?

   விடை: தேன்

**K. ஆரோக்கிய மெர்லின் ராஜ்**
9-ம் வகுப்பு,
விழுப்புரம்.

5. தலையில்லை இடையில்லை கையுண்டு விரலில்லை அது என்ன?

   விடை: வயல்

6. தோட்டம் பாழானால் நாத்து நட முடியாது அது என்ன?

   விடை: தலைமுடி

7. ஒரே தாய்க்கு ஆயிரம் பிள்ளைகள் அது என்ன?

   விடை: ஆலமரம்

8. தலைக்கு குடை காலில் முள் அது என்ன?

   விடை: குண்டுசி

**K. மகேந்திரன்**
4-ம் வகுப்பு,
திருவண்ணாமலை.

9. அங்கே போறான் இங்கே வாறான் அடியைப் பார்த்தால் தெரியவில்லை அவன் யார்?

   விடை: எறும்பு

10. ஒரு பெண்ணிற்கு மூன்று கொண்டை அது என்ன?

    விடை: அடுப்பு

11. மரத்துல கோண, செடியில சிகப்பு, ஆத்துல வெள்ள அது என்ன?

    விடை: புளியாம்பழம், மிளகாய் பழம், மீன்

12. வெள்ளமச்சானுக்கு நுணியில கருப்பு?

    விடை: தீக்குச்சி

**சந்தோஷ்**
5-ம் வகுப்பு,
ஈரோடு.

17. உறித்த புறா சந்தைக்கு போகுது?

    விடை: தேங்காய்

18. கன்று நிற்க கயிறு மேயுது அது என்ன?

    விடை: பூசனிக்கொடி

19. தலையில் கீரிடம் வைத்த தங்க பழம் அது என்ன?

    விடை: அண்ணாச்சிப்பழம்

20. நுகர்ந்தால் மனக்கும், சுவைத்தால் புளிக்கும் அது என்ன?

    விடை: எலுமிச்சை பழம்

M. **ஆனந்தி,**
5-ம் வகுப்பு,
வேலூர்.

## அறிந்துக் கொள்ளுங்கள்

### பாரம்பரிய கலைகள்

- சிலம்பம்
- கோலாட்டம்
- பட்டிமன்றம்
- வில்லுப்பாட்டு


### ஆட்டங்கள்

- கும்மி
- மயிலாட்டம்
- காவடியாட்டம்
- பொய்க்கால் குதிரை ஆட்டம்
- தெருக்கூத்து
- ஒயிலாட்டம்
- பாம்பாட்டம்
- உருமி ஆட்டம்
- புலி ஆட்டம்
- பறை ஆட்டம்
- கரகாட்டம்
- மாடு ஆட்டம்
- உறியடி ஆட்டம்
- கொல்லிக் கட்டை ஆட்டம்
- சிலம்பாட்டம்
- குறவன் குறத்தி ஆட்டம்
- கைச்சிலம்பாட்டம்
- தேவராட்டம்
- தப்பாட்டம்
- காளியாட்டம்
- சேவையாட்டம்
- பேயாட்டம்
- சாமியாட்டம்


### கூத்துக்கள்


- சாக்கம்
- சாந்திக் கூத்து
- மெய்க் கூத்து
- அபிநயக் கூத்து
- நாட்டுக் கூத்து
- விநோதக் கூத்து
- குரவைக் கூத்து
- கலிநடனம் என்னும் கழாய்க் கூத்து
- கரகம் என்னும் குடக் கூத்து
- பாய்ந்தாடும் கரணம்'
- நோக்கு பார்வைக் கூத்து'
- நகைச்சுவை கொண்ட வசைக் கூத்து'
- சாமியாட்டம் அல்லது வெறியாட்டு'
- பொம்மலாட்டம்.

## இதில் எத்தனை கட்டங்கள் உள்ளது என்று கண்டுப்பிடியுங்கள் பார்க்கலாம்?




## Which number is missing from the emty segment?



## நாங்கள் எங்கள் அரண்மனைக்கு செல்ல வழி சொல்லுங்கள் பார்க்கலாம்?





## ஏழு வித்தியாசங்களை
## கண்டுப்பிடியுங்கள் பார்க்கலாம்?












# ஓவியங்கள்



**S. பிரவின்**
3-ம் வகுப்பு,
ஈரோடு.




**N. அருண்**
2-ம் வகுப்பு,
ஈரோடு.





**அபிநயா**
7-ம் வகுப்பு,
திருவண்ணாமலை.



**N. வினோதினி**
7-ம் வகுப்பு,
திருவண்ணாமலை.



**N. பாரதி**
6-ம் வகுப்பு,
திருவண்ணாமலை.



**S. ஜனனி**
7-ம் வகுப்பு,
வேலூர்.



**S. திருப்பதி**
5-ம் வகுப்பு,
வேலூர்.



**K. புவனேஷ்வரி**
6-ம் வகுப்பு,
திருப்பத்தூர்.



**G. மெர்லின் ராஜ்**
6-ம் வகுப்பு,
திருப்பத்தூர்.

## ஓவியங்கள்



**A. கார்மல் மேரி**
7-ம் வகுப்பு,
விழுப்புரம்.



**S. வினோலின் மேரி**
5-ம் வகுப்பு,
விழுப்புரம்.



**S. விமல் ராஜ்**
8-ம் வகுப்பு, விழுப்புரம்.



**S. பிரிய தர்ஷினி**
5-ம் வகுப்பு, திருவண்ணாமலை.



**S. பமிலா**
5-ம் வகுப்பு, சென்னை.



**R. ஷயாம்**
6-ம் வகுப்பு,
சென்னை.



**T. விஷ்னு பிரியா**
7-ம் வகுப்பு,
ஈரோடு.